DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 17.07.2025.

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No.14/2024 |
| Deposition of Witness for Prosecution | : | PW.2 |
| Name | : | மனோஜ் |
| Father Name | : | ராமசந்திரன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | xxxx |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. E. Govindharasu, Grade III Bench Clerk, of this court, on 17.06.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

**(எதிரி ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் தற்போது சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், பிலியூரில் குடியிருந்து சேலத்தில் கல்லூரி படித்து வருகிறேன். 24.03.2024-ம் தேதி நான் கல்லூரியிலிருந்து வீட்டிற்கு வந்தபோது ஏற்காட்டிலிருந்து எங்கள் ஊருக்கு செல்லும் பேருந்தை தவரவிட்டுடேன் அதனால் எனது அப்பா அ.சா.1 ராமசந்திரனுக்கு போன் செய்து என்னை அழைத்துவர அண்ணன் தட்சணாமூர்த்தியை அனுப்புமாறு சொன்னேன். தட்சணாமூ ர்்தி இருசக்கர வாகனத்தில் ஏற்காடு வந்து என்னை அழைத்துக்கொண்டு திரும்ப நாங்கள் வீட்டிற்கு சென்றோம். மஞ்சக்குட்டை தாண்டி சர்ச் கோவில் கேட் அருகே சென்றுகொண்டிருந்தபோது நாங்கள் சென்ற திசையிலேயே இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்த நபர் திடிரெண்று சென்ற வேகத்தில்

சைகை செய்யாமல் இருசக்கர வாகனத்தை திருப்பி விட்டார். திருப்பியதில் நாங்கள் சென்ற வாகனம் அந்த இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது. மாலை 05.00 – 05.30 மணியளவில் விபத்து நடைபெற்றது. எனக்கு முதுகில் எழும்பு முறிவு காயம், உதட்டிலும் காயம் ஏற்பட்டது. தட்சணாமூர்த்திக்கு தலையில் காயம் ஏற்பட்டது. நான் உடனடியாக எனது தந்தைக்கு தகவல் சொன்னேன். அதன் பின்பு அருகிலிருந்தவர்கள் ஆம்புலன்சிற்கு தகவல் சொன்னார்கள். சம்பவ இடத்திற்கு ஆம்புலன்ஸ் வந்தபோது எனது அப்பாவும் சம்பவ இடத்திற்கும் வந்துவிட்டார். எனது அண்ணனை ஆம்புலன்ஸ் மூலமாக ஏற்காடு அரசு மருத்துவமனைக்கு கொண்டுவந்து சேர்த்தோம். மருத்துவமனையில் எனக்கு சிகிச்சை அளித்தார்கள். நான் வெளியே வந்தபோது எனது அண்ணன் இறந்துவிட்டதாக சொன்னார்கள். அதன்பிறகு என்னை மேல்சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்தவமனைக்கு அனுப்பிவிட்டார்கள். சம்பத்தின்போது நாங்கள் சென்ற வாகனத்தை எனது அண்ணன் ஓட்டினார். அதன் பதிவெண் TN 54 M 2138 HERO SPLENDER PLUS ஆகும். விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தின் பதிவெண் TN 54 Q 4887 என்பது ஆகும். ஆஜர் எதிரிதான் சம்பவத்தின் போது விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்தார். சம்பவத்தின் போது ஆஜர் எதிரி ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தில் அவரது மனைவி மற்றும் ஒரு குழந்தை இருந்தது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

சம்பவ நடந்த நேரம் மாலை சுமார் 06.00 இருக்கும் என்றால் 05.00 – 05.30 மணிக்குள் இருக்கும். நீங்கள் சென்ற வழிப்பாதையானது 30 அடி அகலம் கொண்டிருக்கும் என்றால் சரிதான். சம்பவமானது ஒண்டிக்கடை – பிலியூர் ரோடு மஞ்சக்குட்டை கிரேக் மோர் சர்ச் கேட்டிற்கு முன் தான் நடைபெற்றது என்றால் சரிதான். சம்பவத்தின் போது நீங்கள் உங்களுடைய அண்ணன் தட்சணாமூர்த்தியும் தலைகவசம் அணியாமல் தான் ஓட்டி வந்தீர்கள் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் நீங்கள் பின்னால் அமர்ந்துசென்றீர்கள்

என்றால் சரிதான். எனது அண்ணனுக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. போலீசார் விசாரணையில் அதனை ஒப்படைத்தீர்களா என்றால் ஒப்படைத்தோம். விபத்தில் சேதமடைந்த HERO SPLENDER PLUS வண்டியானது உங்களுடைய அண்ணன் பெயரில் உள்ளதா என்றால் இல்லை எனது அப்பாவின் பெயரில் உள்ளது. விபத்து குறித்து தனிப்பட்ட முறையில் நீங்கள் புகார் கொடுத்தீர்களா என்றால் இல்லை. விபத்து நடந்தவுடன் நீங்கள் மயக்கமடைந்துவிட்டீர்கள் என்றால் இல்லை உடனே எழுந்துவிட்டேன். சம்பவ இடமானது பள்ளமானதும், வளைவான பகுதியுமாகும் என்றால் இல்லை மேடாக இருக்கும். விபத்தில் எதிரிக்கும் அவரது மனைவிற்கும் அடிப்பட்டிருந்தது என்றால் அதுபற்றி தெரியாது நாங்கள் மருத்துவமனைக்கு சென்றுவிட்டோம். விபத்திற்கு காரணமே உங்கள் அண்ணன் தான் என்றும் அவர் தான் சரியாக கவனிக்காமல் வந்ததன் காரணமாக விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

Sd/-.R. Elanchezhian
District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.